

தஞ்சை மாநகராட்சி பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள அண்ணா சிலை அருகே முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கு திருவுருவ சிலை அமைப்பதற்காக நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு சிலை அமைய உள்ள இடத்தை நேரில் பார்த்து ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை. சந்திரசேகரன் எம்.எல்.ஏ., வடக்கு மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம். பி., ச.முரசொலி எம்.பி, டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, மாநகர செயலாளர் மேயர் சண்.இராமநாதன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.




தருமபுரி கிழக்கு மாவட்டம், தர்மபுரி நகர கழகம் சார்பில் கழக ஆட்சியின் சாதனை விளக்கப் பொதுகூட்டம் தர்மபுரி நகர கழக செயலாளர் நாட்டான் மாது தலைமையில்,நகர துணை செயலாளர் வ.முல்லைவேந்தன் வரவேற்புரையில் நடைபெற்றது. கூட்டத்தில் தருமபுரி கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் வழக்கறிஞர் ஆ.மணி எம்.பி,மற்றும் தலைமைக் கழக பேச்சாளர் சி. இளங்கோவன் ஆகியோர் திராவிட மாடல் அரசின் சாதனைகளை விளக்கி பேசினர். இந்நிகழ்வில் முன்னாள் தருமபுரி கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி, மாவட்ட நிர்வாகிகள் வே.தங்கமணி, ரேணுகாதேவி, மற்றும் ஒன்றிய கழக செயலாளர்கள் ஏ.எஸ்.சண்முகம், டி.எல்.காவேரி,வீரமணி, கருணாநிதி,மாவட்ட பிரதிநிதி சுருளிராஜன், அழகுவேல், அன்பழகன், கனகராஜ், சம்பந்தம், கோமளவள்ளி ரவி, சந்திரமோகன், டி.ராஜா,த.வே கிருஷ்ணன், ஐ.டி.விங் உதயசூரியன், ஈஸ்வர், ரகு, உள்ளிட்ட கழகத்தினர், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## பெரம்பலூர் மாவட்டம் வேப்பூர் ஊராட்சியில்

# ரூ.1.52 கோடி மதிப்பிலான திட்டப்பணிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்!

பெரம்பலூர்,மே 14-

பெரம்பலூர் மாவட்டம் வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட குன்னம், மூங்கில்பாடி, கொளப்பாடி, புதுவேட்டக்குடி, காடுர், ஒலைப்பாடி ஆகிய ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கிரேஸ் பச்சாவ் தலைமையில், ரூ.1.52 கோடி மதிப்பிலான 10 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார்.

இதில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதிலிருந்து ஏழை எளிய அடித்தட்டு மக்களின் நலனை கருத்தில் கொண்டு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில், மக்களின் தேவைகளை உணர்ந்து, அவற்றை திட்டங்களாக வழங்கி வருகின்றார்.

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து மக்களும் பயன்பெறும் வகையில் அரசின் திட்டங்கள் அனைத்து பகுதிகளிலும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

அதனடிப்படையில் இன்று வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள மக்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றும் வகையில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டங்களின் கீழ் குன்னம் ஊராட்சியில் ரூ.16,45,000 மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மைய கட்டிடம் கட்டும் பணி, கொளப்பாடி ஊராட்சியில் ரூ.29,70,000 மதிப்பீட்டில் புதிய ஊராட்சி மன்ற அலுவலக கட்டடம் கட்டும் பணி, ஒலைப்பாடி ஊராட்சி வேப்பூர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ரூ.8,34,000 மதிப்பீட்டின் விளையாட்டு மைதானம் அமைக்கும் பணி,

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் புதுவேட்டக்குடி ஊராட்சியில் ரூ.31,40,000 மதிப்பீட்டில் புதிய ஊராட்சி மன்ற அலுவலக கட்டடம் கட்டும் பணி, ரூ.8,10,000 மதிப்பீட்டில் வரகூர் மெயின் ரோட்டில் கதிரடிக்கும் களம் அமைக்கும் பணி, காடூர் ஊராட்சி நல்லறிக்கையில் ரூ.16,45,000 மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மையம் கட்டடம் கட்டும் பணி, மாநில நிதிக்குழு மானிய நிதியின் கீழ் ரூ.10,34,000 மதிப்பீட்டில்புதுவேட்டக்குடி வளைஞ்சான் ஏரி தூர்வாரும் பணி, காடுர் ஊராட்சிக்குட்பட்ட நல்லறிக்கையில் ரூ.6,58,000 மதிப்பீட்டில் நாச்சியார் ஏரி தூர்வாரும் பணி, ரூ.14,65,000 மதிப்பீட்டில் புது ஏரி தூர்வாரும் பணி, மத நல்லிணக்க நிதியின் கீழ் மூங்கில்பாடி ஊராட்சி ஆதிதிராவிடர் பகுதியில்ரூ.10,00,000 மதிப்பீட்டில் மயான சாலை பலப்படுத்தும் பணி, என மொத்தம் ரூ.1,52,01,000 மதிப்பீட்டில் 10 புதிய திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டு, பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. குறித்தகாலத்திற்குள் அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

இவ்வாறு தெரிவித்தார்.

இதில் மாவட்ட கழக பொறுப்பாளர்வீ.ஜெகதீசன், சி.ராஜேந்திரன் முன்னாள் மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் டாக்டர் அ.கருணாநிதி, வேப்பூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அறிவழகன், சேகர், குன்னம் வட்டாட்சியர் சின்னதுரை மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு வடக்கு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் சட்டமன்ற தொகுதி டி.என்.பாளையம் ஒன்றியம் வாணி புத்தூர் பஸ் ஸ்டாப் அருகில் ”நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு! சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் ஒன்றிய கழக செயலாளர் எம்.சிவபாலன் தலைமையில் ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம், தலைமை கழக பேச்சாளர் செ.தமிழரசன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். கூட்டத்தில் மாவட்ட அவைத்தலைவர் எ.பெருமாள்சாமி, மாவட்ட கழக பொருளாளர் கே.கே.சண்முகம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.ஆர்.கந்தசாமி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பேரூர் கழக செயலாளர்கள், பேரூர் மன்ற தலைவர்கள், கழக உடன்பிறப்புகள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.




கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின், நாடு போற்றும் நான்காண்டு.. தொடரட்டும் பல்லாண்டு.. சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் கரூர் மத்திய பகுதி கழகத்தின் சார்பில், கரூர் ஜவகர் பஜார் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் சிலை அருகில், நடைபெற்றது. கரூர் மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ, தலைமை கழக பேச்சாளர் நாகம்மை கருப்பையா சிறப்புரையாற்றினர். பகுதி கழக பொறுப்பாளர் வி.ஜி.எஸ். குமார், மாநகர செயலாளர் எஸ்.பி. கனகராஜ், பூவை ரமேஷ்பாபு ஜோதிபாசு, அங்கு பசுபதி, கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், அருகில் உள்ளனர். கூட்டத்தில் வெள்ளமென திரண்டு தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள்.




கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் ஓசூர் மாநகர தி.மு.க. சார்பில், நாடு போற் றும் 4 ஆண்டு சாதனை, தொடரட்டும் இது பல்லாண்டு என்ற தலைப்பில் 3 தெருமுனை பிரசார கூட் டங்கள், ஓசூர் ராகவேந்திரா கோயில், தாலுகா அலுவலகம், அண்ணா சிலை, ஏரித்தெரு, காந்தி சிலை ஆகிய இடங்களில் நடைபெற்றது.தொடர்ந்து மூக்கொண்டப்பள்ளியில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் பிரகாஷ் எம்.எல்.ஏ., மேயர் சத்யா, தலைமைக் கழக பேச்சாளர் ரவி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். இதில் துணை மேயர் ஆனந்தய்யா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் எல்லோரா மணி, மாநகர அவைத்தலைவர் செந்தில் குமார், துணை செயலாளர் கோபால கிருஷ்ணன், உள்ளிட்ட மாவட்ட, மாநகர நிர்வாகிகள் வட்ட செயலாளர்கள் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்

## பி.எம்.அன்பழகன் தலைமை!

# செம்பனார்கோயில் மேலையூரில் சாதனை விளக்கப் பொதுக் கூட்டம்!

## நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. - பொன்.ரவிச்சந்திரன் சிறப்புரை!

மயிலாடுதுறை, மே 14-

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் மேலையூரில் நாடு போற்றும் நான்காண்டு, தொடரட்டும் இது பல்லாண்டு கழக அரசின் 4 ஆண்டு சாதனை விளக்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு செம்பனார்கோயில் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் பி.எம்.அன்பழகன் தலைமை தாங்கினார்.

மேலையூர் கிளை செயலாளர் சு.கருணாநிதி வரவேற்றார். ஒன்றிய அவைத்தலைவர் இரா.சுப்பையா, மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.தென்னரசு, ஜி.ஆர்.பிரபாகர், ஒன்றிய துணைச் செயலாளர்கள் ஜி.ஆர். பிரபாகர், எஸ்.ஜி. நெடுஞ்செழியன், அமுதா.அன்பழகன், கே.சத்தியராஜ் பொருளாளர் ஏ. சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஒன்றியச் செயலாளர்கள் செம்பனார்கோயில் தெற்கு எம்.அப்துல்மாலிக், செம்பனார்கோயில் மத்திய அமிர்த.விஜய குமார் ஆகியோர் தொடக்க உரையாற்றினர்கள். கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், தலைமைக் கழகப் பேச்சாளர் பொன்.ரவிச்சந்திரன் ஆகியோர் சிறப்புரை யாற்றி னார்கள்.

கூட்டத்தில் சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் எம்.எம்.சித்திக், மாவட்டக் கழக துணைச் செயலாளர் மு.ஞான வேலன், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், தரங்கம்பாடி பேரூர் செயலாளர் எஸ்.கே.முத்து ராஜா, பொதுக் குழு உறுப்பினர்கள் ஜெ.கபிலன், ஹர்ஷத், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வி.எஸ்.என். செந்தில்,

மாவட்ட சிறுப்பான்மை அணி அமைப்பாளர் எஸ்.எம்.சம்சுதீன், மற்றும் ஒன்றியக் கழக நிர்வாகிகள், கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு முன்னாள் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் என்.கனகராஜ் நன்றி கூறினார்.




நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு கழக சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் அரியலூர் மாவட்டம் அரியலூர் வடக்கு ஒன்றியம் சார்பில் அரியலூர் மாவட்ட கழக செயலாளர் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழிகாட்டுதலின்படி ஒன்றிய பொறுப்பாளர் கோ.அறிவழகன் தலைமையில் இராயம்புரம் கிராமத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் கழக கொள்கை பரப்பு செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், கழக இளம் பேச்சாளர் கு.விஜயகுமார் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். உடன் மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேகரன் மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அமைப்பாளர் ம.விஜயகுமார் மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் சந்திர கௌதம், மற்றும் மாவட்ட ஒன்றிய நகர கழக நிர்வாகிகள் கழகத் தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.




”நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு! கழக சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் திருப்பூர் தெற்கு மாவட்டம், மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதி உடுமலை மத்திய ஒன்றியத்திற்கு உட்பட்ட பெரிய வாளவாடி ஊராட்சியில் ஒன்றிய கழக செயலாளர் செந்தில்குமார் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன், தலைமைக் கழக பேச்சாளர் சிங்கை பிரபாகரன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். உடன் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் அமைப்பளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.